Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

தனிப்பிரதி ரூ. 5/-
Reg. No. KKI/63/2015-2017

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 63 கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள் சங்.126:5 ஜூன் 2017 No.6

நான் ஒரு மனிதனைத் தேடினேன்

And I sought for a man

Carter Conlon

தேவனோடு நடப்பதாக சொல்லப்பட்ட இஸ்ரவேல் தேசம் வீழ்ச்சி நிலைக்கு வந்த காலத்தைக் குறித்து எசேக்கியேலின் புஸ்தகம் குறிப்பிடுகிறது. தேவன் அவர்களுக்கு அமைத்துக் கொடுத்த நிலையிலிருந்து அவர்கள் விழுந்து விட்டார்கள் என்பது தான் உண்மை. மக்களின் பாவம் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடையும்போது, தேவன் தமது பாதுகாவலின் கரத்தை நீட்டுகிறார் என்பதற்கு சரித்திரத்தில் பல சான்றுகள் காணப்படுகின்றன. *(எசேக்.22:23-25 வாசிக்க)*

ஒரு தேசம் நீதி வாழ்விலிருந்து விலகிச் செல்ல ஆரம்பிக்கும் போது - வரப் போகிறவைகளைக் குறித்துச் சொல்லி எச்சரிக்க, தீர்க்கதரிசனம் கூற ஒரு தீர்க்கன் எழுப்பப்படுகிறான். அவர்கள் தேவனிடத்திற்குத் திரும்பா விட்டால் தொடர்ந்து ஏற்படும் நிகழ்வு கள் தவிர்க்க முடியாதவை. இந்த குறிப் பிட்ட சம்பவத்தில் இஸ்ரவேலின் தீர்க் கர்கள் மக்கள் முகத்திற்காகப் பேசினார் கள். அவர்கள் 'விலையேறப் பெற்ற பொருட்களை' அல்லது இன்னொரு விதமாகக் கூறினால் தேவனுடைய பொக்கிஷத்தை *(அந்த தலைமுறை யினர் பெற்றுக் கொள்ள வேண்டிய)* திருடினார்கள். 'அவர்களில் அனேகர் விதவைகளாக்கப்பட்டார்கள்' என்பது குடும்பங்கள் துண்டாக்கப்பட்டு, தேசத்தின் பெலன் இழந்து போக ஆரம்பித்தது. *(எசேக்.22:26,28 வாசிக்க)*

தேவனுக்குரியது எது? அல்லா தது எது? என்ற வேறுபாடு இல்லாமற் போயிற்று. அதிகாரத்திற்கு ஆசை கொண்டு தீர்க்கர்கள் மக்கள் கேட்க விரும்பியதைக் கூறினார்கள். அவர்கள் பேசுவது உண்மைதானா என்பதைக் குறித்த அக்கரை அவர்களுக்கு இல்லாம லிருந்தது. தேவன் பேசாதவைகளை யும், 'இப்படிக் கர்த்தர் உரைக்கிறார்' என்று கூறினார்கள்.

"தேசத்தின் ஜனங்கள் இடுக்கண் செய்து கொள்ளையடித்து சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி அன்னி யனை அதிகமாய்த் துன்பப்படுத்து கிறார்கள்". இங்கு தேசத்தின் வீழ்ச்சியை நாம் பார்க்கிறோம். சமுதாய ஆவிக்குரிய மற்றும் சன்மார்க்க சீரழிவு ஏற்பட்டு நியாயத்தீர்ப்பின் விளிம்பிற்கு மக்களைக் கொண்டு வந்தது.

இன்று நமது தேசங்களும் இந் நிலையிலிருப்பதை நாம் உணர்ந்து கொள்ளுவது மிகவும் அவசியம். கட்டுப்பாட்டை நாம் இழந்து விட்டோம். தீமை நன்மையாக எண்ணப்படுகிறது. நன்மை தீமையாக விரைவில் மாறி வருகிறது. நாமும் இடுக்கண் செய்து கொள்ளையுமடிக்கிறோம். குடும்ப உறவு நமது கண்களுக்கு முன்பாக அழிக் கப்படுகிறது. குடும்ப அமைப்பு இழந்து போகும் போது சமுதாயம் அழிந்து போகிறது; ஆயினும் இரக்கம் நியாயத் தீர்ப்புக்கு மேலாக வெற்றி பெறும்.

நிச்சயமாக ஆண்டவர் நியாயத்தீர்ப்பில் நீதியுள்ளவர்

"நான் தேசத்தை அழிக்காத படிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவும்தக்கதாக ஒரு மனுஷ னைத் தேடினேன். ஒருவனையும் காணேன். ஆகையால் நான் அவர்கள் மேல் என் கோபத்தை ஊற்றி, என் மூர்க்கத்தின் அக்கினியால் அவர்களை நிர்மூலமாக்கி, அவர்களுடைய வழியின் பலனை அவர்கள் தலையின் மேல் சுமரப்பண்ணுவேன், என்று கர்த்தரா கிய ஆண்டவர் உரைக்கிறார் என்றார்" *எசேக்.22:30,31.*

ஒரு மனிதனைத் தேடினேன்! தேவன் ஏற்கெனவே தேசத்தை அகற்றி விட்டார். ஒரே ஒரு மனுஷன் தேவனு டைய கரம் தடுக்கப்படும்படி திறப்பின் வாயிலே நிற்க இல்லாவிட்டால் சமுதா யம் அழிவின் பாதையிலேயே செல்லும்.

ஆலயத்தை எடுத்துக் கொள் ளும் போது ஒரு மனிதனையுமே காணாமலிருப்பது ஆச்சரியமானது. ஆலயம் மார்க்க சேவைகளிலும், வேத வசனங்களைப் படிப்பதிலும் ஈடுபட்டி ருக்கும் மக்களால் நிரம்பியிருக்க வேண்டும். மார்க்க நெறிப்படி வாழ விரும்புகிற யாவரும் அங்குண்டு. எனவே இது ஆச்சரியம் தான்! மக்கள் வேத வசனத்தைப் படிக்காததாலோ, அறியாத தாலோ அல்ல, அவர் இன்னும் இரக்க முள்ளவராயிருக்கிறார் என்பதனை ஒருவரும் விசுவாசிக்கவில்லை என்பது தான் உண்மை.

தேவ ஜனமாக நாம் நியாயத் தீர்ப்பைக் குறித்து கெட்டியான உணர் வுடனிருப்பதால் இரக்கம் நியாயத் தீர்ப்பை மேற்கொள்ளக் கூடியது என்ற மனநிலையுடனிருக்கிறோம். நம்மைச் சுற்றிலும் காணப்படும் செய்திகளைப் பார்த்து, 'நிச்சயமாகவே தேவன் இதனை நியாயந்தீர்க்கப் போகிறார்' என்ற முடிவுக்கு வந்து விடுகிறோம். இந்த நிலை நீடிப்பதால் தேவனுடைய இருதயத்தை நாம் அறியக்கூடாத வர்களாகி இறுதியில், தேவன் இரக்கம் காண்பிக்க விரும்புகிறார் என்ற விசுவாச மற்றவர்களாகி விடுகிறோம்.

ஒரு ஆவிக்குரிய விழிப்புணர்வு

ஆனால் சரித்திரம் முழுவதை யும் நாம் பார்க்கும் போது 'ஆவிக்குரிய விழிப்புணர்வின்' காலங்கள் இருந்தது என்பது ஒரு நல்ல செய்தி. இதற்குக் காரணம் ஏதோ ஒருவரோ அல்லது சிலரோ **தேவன் இரட்சித்து, குணமாக்க விரும்புகிறவர்** என்பதைத் திடீரென உணருவதுதான். நமது ஏழ்மையின் மத்தியிலும் அவர் தமது ஐசுவரியங் களை இன்னொரு முறை அளிக்கவும் நமது பெலத்திலே அல்ல, நமது பெல வீனத்திலே இதைச் செய்யவும் விருப்ப முடையவர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளுகிறார்கள். நாம் பெலசாலி களாயிருக்கும் போது தேவ சிங்காசனத் திற்கு நாம் கிட்டிச்சேர வேதவசனம் கூற வில்லை. நாம் பெலவீனராயிருக்கும் போது நமது தேவைகள் சந்திக்கப்பட அவரிடம் வரவே கூறப்படுகிறது எபி.4:16.

நாம் அசாதாரணமான பொக்கி ஷத்தை அதாவது அவருடைய இரக்கம், வல்லமை, ஆகியவற்றை அவரிட மிருந்து பெற்றுக் கொள்கிறோம். "உங்கள் தேசம் கைவிடப்பட்டுள்ளது, உன் தீர்க்கர்கள் எனக்காகப் பேச வில்லை. பதிலாக அவர்கள் மக்களை வல்லமையின்மைக்கு வழிநடத்தி தங்கள் குறைகளை மறைக்க ஒரு மார்க்க ஒழுங்கை உருவாக்கிக் கொண் டார்கள். அவர்கள் அதிகாரம் செலுத்தி, கொள்ளையடித்து, ஏழைகளையும், தேவையிலிருப்போரையும் கவலைப் படுத்தினார்கள். ஆயினும் நான் இன்னும் ஒருமுறைகூட இரக்கத்தைக் காண்பிக்க விரும்பு கிறேன்" என்ற வார்த்தைகளை ஆண்டவர் பேசுவதை மக்கள் கேட்க ஆரம்பிக்கும் போது அந்த நிமிடமே எழுப்புதல் ஆரம்பிக்கும்.

எசேக்கியேலின் நாட்களில் தங்களை தேவன் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கையுடைய எவரையும் தேவன் காண முடியவில்லையா? ஒரு வேளை மக்கள் தேவன் இரக்கமுள்ளவர் என்று விசுவாசித்தாலும் தங்கள் ஆதாரங்களை நம்பி; ஒரு வேளை தேவன் இரக்கமுள்ளவராயிருக்கலாம்,

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S. Devadason 1955-1999)

முகவரி: வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் 629 001
Mobile: 95432 21008 e.mail:varukayinthoothan@hotmail.com

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வாக்குத்தத்தம்

"கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளை போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்து போகார்கள்".

ஏசாயா 40:31.

வாசகருக்கு என் அன்பு கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதான மும் உண்டாவதாக.

ஜூன் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன், ஸ்தோத்தரிக்கிறேன். முதலாவது வாசகர் கடிதங்கள் இரண்டை, ஆண்டவருக்கு மகிமையாகவும், வாசகரை உற்சாகப்படுத்தவும் கீழே அச்சிடுகிறேன்.

Praise The Lord

கர்த்தருக்குள் அன்பார்ந்த ஐயா, கிறிஸ்து இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள் கூறி சகோதரி எழுதுவது: கடிதம் மூலம் தொடர்பு கொள்ள உதவிய தேவனுக்கு கோடி, கோடி நன்றிகள். தற்போது எனது வயது ***79***.

1964-ல் இருந்து தூதனை பெற்றுக் கொண்டு வருகிறேன். இயலாமை, பெலவீனம், உதவிகள் இன்றித் தனிமை காரணங்களால் சந்தா, கடிதம் அனுப்ப உதவிகள் இல்லை. மிகுந்த சிரமத்தின் நிமித்தம் என் தேவன் இக்கடிதத்தை எழுத கிருபை செய்துள்ளார், ஸ்தோத்திரம்.

என் தேவன் தொடர்ந்து அனைத்து காரியங்கள், ஊழியர்கள், ஊழியம், பத்திரிகை இவற்றிற்காக **தினமும் பலமுறை ஜெபிக்கிறேன்.**

இரு கண்களும் அறுவை சிகிச்சை செய்தவை. சற்று தொந்தரவு உள்ளது. எந்த சிறு உதவியும் செய்ய ஆட்கள் அருகில் இல்லை.

என் வசம் T.V.யோ, பத்திரிகையோ இல்லை. வேண்டாம் என்று எண்ணியே வைத்துக் கொள்ளவில்லை. இம்மட்டும் நான் சந்தா அனுப்பாவிட்டாலும் பத்திரிகையை அனுப்பி தருவதற்கு மிக மிக நன்றி கூறுகிறேன். கூடிய விரைவில் சந்தா அனுப்ப முயற்சிக்கிறேன். மிகவும் நன்றி கூறுகிறேன். தொடர்ந்து ஜெபித்து வருகிறேன், ஜெபிப்பேன். எனது ஸ்தோத்திரம் பல.

சகோதரி J.C.S
எலந்தகிரி, கிருஷ்ணகிரி

வருட சந்தா ரூ.100.00

சந்தா, காணிக்கை, கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு, நாகர்கோவில்-629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008

வங்கி கணக்கு எண்

VARUKAYIN THOOTHAN
A/c. No.:431521036
Indian Bank,
W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

வங்கி வழியாக பணம் அனுப்பினால், தொலைபேசி, ஈமெயில், SMS வழியாக உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்.
email :
varukayinthoothan@hotmail.com

கிறிஸ்துவுக்குள் அன்பான ஐயா,

கர்த்தரின் பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். வருகை யின் தூதன் பத்திரிக்கை என் தகப்பனார் திரு C.பால் துரை ராஜ் அவர்களுக்கு வந்து கொண்டிருந்தது. தகப்பனாரின் மறைவிற்குப் பின் எனது தாயார் Mrs.C.Paul Durai Raj அவர்களுக்கு வந்து கொண்டிருக்கிறது (MD 00139 s) எனது தாயாரும் கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்கள். எனவே தயவு செய்து மேற்குறிப்பிட்ட என்னுடைய விலாசத் திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்.ரூ*200/-* M.O. அனுப்பியுள்ளேன். எங்கள் வீட்டில் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் பார்வையற்றவர்களுக்கான ஜெப கூடுகை என் தாயார் நடத்தி வந்தார்கள். அவர்களின் நினைவாக அதனை கர்த்தரின் ஒத்தாசையுடன் நான் நடத்தி வருகிறேன். அக்கூடு கையின் போது இப்பத்திரிகையை பார்வையற்றவர்களுக்கு வாசித்து காண்பிப்பேன். ஊழியங்களுக்காக ஜெபித்து வருகிறோம். எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளவும். விசேஷமாக என்னுடைய மகனுக்கு ஒரு குணசாலியான பெண்ணை தேவன் தரும்படி ஜெபிக்கவும்.

சகோதரி P.N.R.,
நாகமலை, புதுக்கோட்டை

ஒரு மனுஷனைத் தேடினேன் எசேக்கியேல் 22:30
I sought for a man (women)

அடியேன் முற்றிலும் எதிர்பாராத விதமாய் ஒரு மிஷனெரி கட்டுரையை உங்களுக்கு எழுதுகிறேன்.

எனது சகோதரியின் கணவர் Rt.Rev. Dr.C.சாமுவேல் M.A., B.D., D.D., அவர்கள் கன்னியாகுமரி அத்தியட்சாதீனத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)

எழுப்புதலுக்காக இதய கதறல் 2017
(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
மேய்	20-05-2017 3-வது சனி	புது வாழ்வு எல்லாம் இயேசுவுக்கே திருச்சபை T.R. பட்டினம், காரைக்கால்
ஜூன்	10-06-2017 2-வது சனி	True Life Mission, நாகர்கோவில்
ஜூலை	15-07-2017 3-வது சனி	கன்மலை ஆராதனை சபை, நெல்லிக்குப்பம், கடலூர்
ஆகஸ்ட்	19-08-2017 3-வது சனி	இயேசு நம்மோடு சபை, கருங்கல், குமரி மாவட்டம்
செப்டம்பர்	16-09-2017 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை, மணலி, சென்னை
அக்டோபர்	07-10-2017 1-வது சனி	மாரநாதா ஜெபவீடு, பொள்ளாச்சி
நவம்பர்		காந்தி நகர் C.S.I. சபை திருநெல்வேலி
டிசம்பர்	02-12-2017 1-வது சனி	I.P.C சபை மார்த்தாண்டம்

எழுப்புதலுக்காக இதய கதறல் 2018
(உயிர் மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

மாதம்	தேதி	இடம்
ஜனவரி		
பிப்ரவரி	17-02-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை கோயம்பத்தூர்
மார்ச்	17-03-2018 3-வது சனி	அசெம்பிளி ஆப் காட் சபை அரியா குப்பம்,பாண்டிச்சேரி
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் எனது மூலமாக அல்ல என்று முடிவு பண்ணி யிருக்கலாம்.

கிதியோனுக்கு வந்த இரக்கத்தின் சமயத்தில் அவன் தவறான முடிவு எடுத்திருந்தால் எப்படியிருக்கும்! தேவன் அவனிடம் தோன்றி 'பராக்கிரம சாலியே' என்று அழைத்த போது தேசம் 1,35,000 மீதியானியரால் விழுங்கப் பட்டு விட்டது. அவர்கள் இஸ்ரவேலரின் அறுவடையை எடுத்துக் கொள்ள முயற்சித்தனர் (நியா.6:12). முதலாவது கிதியோன் தேவ தூதனிடம் இப்படிக் கேட்டான், ". . .ஆ என் ஆண்டவரே நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன், இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டாரில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்" நியா.6:15. மேலும் என் தந்தை கொல்லைப்புறத்தில் ஒரு அன்னிய தேவனுக்கு பலிபீடமிருக்கிறது. இப்படிப்பட்ட என்னிடமா பேசுகிறீர். நீர் பேசுவது சரியான ஆளிடம்தானா?

அந்த இரக்கத்தின் வேளை கடந்து போயிருந்தால் என்னவாகியிருக்கும்?

ஆயினும் தேவன் கிதியோனுக்குக் கொடுத்த வார்த்தை, நாம் அனைவரும் தேவனுக்கு பலசாலிகளாயிருக்கத் தேவையானதாயிருக்கிறது. கிதியோன் ஒரு திட்டத்தோடும் நல்ல உணர்வோடும் கர்த்தரைப் பின்பற்றிய போது தேவன் வெறும் 300 பேரைக் கொண்ட சேனையின் மூலம் மீதியானியர் மேல் பெரிய வெற்றியை அருளினார் நியா.7:20-22.

அந்த இரக்கத்தின் வேளை கடந்து சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும்? தேவன் தேடியும் கிதியோன், மோசே, எஸ்தர் போன்ற ஒருவரைக் காணவில்லையென்றால் என்ன நடக்கும்? எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த தேவஜனங்கள் என்ன நிலையை அடைந்திருப்பார்கள்? எஸ்தர் ராஜா சமுகத்தில் தன் விண்ணப்பத்தை வைக்கும் வாய்ப்பு கிடைத்திரா விட்டால் அவருடைய ஜனங்களின் எதிர்காலம் எப்படி அமைந்திருக்கும்?

நமது தலைமுறையினரின் காலத்திலும் பொக்கிஷம் ஒருமுறை கூட திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இது சில பருவ காலங்களில் மட்டுமே வெளிப்படுத்தப்படும். அந்தக் காலத்தை பயன்படுத்திக் கொள்வது மிக அவசியம்.

தேவன் அவரது மகிமைக்காக பயன்படுத்தக் கூடிய மக்களை அழைக்கிறார். மறுமையில் பிரவேசித்த பின்பு தான் எத்தனை முறை தேவன் ஒருவரை பேசி, தேடியிருக்கிறார் என்பதை நாம் இறுதியாகப் புரிந்து கொள்ள முடியும். ஒரு தேசத்தைத் திரளான மக்களால் மாற்றியமைக்க முடியாது. உங்கள் அயலகத்தை மாற்றியமைக்க நூறு பேர் கூட தேவையில்லை. தேவனை விசுவாசிக்கும் ஒருவர் மட்டும் போதும். தேவன் இரக்கம் காண்பிக்க விருப்ப முடையவராயிருக்கிறார். எப்படியும் யாரும் முன் வராவிட்டால் மறுபடியும் பொக்கிஷமானது எதிர் காலம் வரு மட்டும் மறைத்து வைக்கப்படுகிறது. விட்டு விடப்பட்டவர்கள் இழந்து போவார்கள். நாம் வசிக்கும் இந்தக் காலக்கட்டத்தைப் போன்ற ஒரு காலத்தில் தேவன் ஒருவரைத் தேடியும் காணாவிட்டால் அது துக்கமானது. எனவே தேவகரம் உயர்த்தப்பட்டுள்ளது. வேத வசனத்தின்படி மக்களின் பாதை அவர்கள் தலை மேலேயே ஈடு செய்யப்படும்.

விசுவாசத்தில் அடிவைத்து முன்னேறுங்கள்

இந்த வேளையில் நாம் பயன்படுத்தப்பட விரும்பினால் விசுவாசத்தில் அடியெடுத்து வைத்து தாவீதைப் போல முன்னேறுவோம். அவன் இஸ்ரவேலரின் கூடாரத்தில் நடந்து தேவனைக் குறித்த பரிகாச வார்த்தைகளைக் கேட்டான் (1சாமு.17 :23) தேவ நாமம் தூஷிக்கப்பட்டதைக் கேட்ட போது, "ஏன் ஒருவரும் யுத்தம் செய்யவில்லை? எல்லோரும் ஏன் அமைதியாக நிற்கிறார்கள்! நமக்கு நமது சார்பில் போராட தேவன் இல்லையா?" என்று கேட்டான்.

இஸ்ரவேலர் அவனால் சந்தேக மடைந்தாலும் தாவீது, "யாருடைய இருதயமும் கலங்க வேண்டாம். நான் சென்று இந்த அரக்கனுடன் போரிடுவேன்" என்றான். இன்னொரு விசை தேவன் இரக்கமாயிருக்க சித்த முள்ளவர் என்பதனை ஒருவர் விசுவாசித்தார். தாவீது பள்ளத்தாக்கில் சென்று ஒரு கவணையும் 5 கற்களையும் ஆயத்தப்படுத்தினான். தேவன் அந்தச் சிறிய பொருட்களை தமது மகிமைக் காகப் பெருக்கமாய் பயன்படுத்துவார் என்று விசுவாசித்தான். நடந்தது என்ன! தாவீது கோலியாத்தை முறியடித்து, தேவஜனத்தை மறுபடியும் விசுவாசத்தில் கொண்டு வந்தான்.

இதுவே விசுவாசத்தின் சாராம்சம். நமது தலைமுறையினரில் தேவன் எதிர்பார்ப்பது இது ஒன்றே. விசுவாசத்தைக் குறித்து எபி.11:1-3 கூறுவதைப் படிப்போம். இன்னொரு விதமாகக் கூறினால் தேவன் எனது இருதயத்தில் பேசிய வார்த்தைகள் மட்டுமே எனக்குப் போதும் என்று விசுவாசம் நம்புகிறது. ஒன்றுமில்லாய்மையிலிருந்து தேவன் அகிலாண்டத்தைப் படைத்தார் என்றால் தேவன் ஏன் என்னை பயன்படுத்த முடியாது! தேவ வசனத்தைத் தழுவிக் கொள்ளும் இருதயம் எனக்கு வேண்டும்.

விசுவாசம் என்பது கண்ணாடியிலிருந்து தூரத்தைப் பார்ப்பது போன்றது. நம்மைக் குறித்து நாம் விசுவாசிப்பதை விட்டுத் திரும்பி, நம்மைக் குற்றப் படுத்திச் சொல்லிய; நீ இவ்வளவு தூரம் தான் செல்ல முடியும், இதற்கு மேல் முடியாது என்பதையெல்லாம் தள்ளி விட வேண்டும். வேதவசனத்தின்படி தாவீது சவுலின் எச்சரிக்கைகளையெல்லாம் மறுத்து விட்டான். "நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது. நீ இளைஞன், அவனோ தன் சிறுவயது முதல் யுத்த வீரன் என்றான்" 1சாமு.17:33 என்பது தான் சவுலின் எச்சரிக்கை. ஏனெனில் விசுவாசம் என்ன சொல்லுகிறது? "தேவன் பேசும் போது நான் முன்னேறிச் செல்லுவேன். அவர் எனக்கு வல்லமை தருவார். என்னை அவர் அழைத்திருக்கிறார். சர்வத்தையும் சிருஷ்டித்த தேவன் என் உள்ளத்தில் பேசும் போது நான் அவிசுவாசத்தோடு நிற்க மாட்டேன். எனது வாழ்வின் மூலம் நடை பெறவிருக்கும் அற்புதத்திற்காக அவரை நம்புவேன்".

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக புத்தகங்களையும் சாட்சிகளையும் கற்ற பின்பும் வேதபுத்தகத்தில் கூறப்பட்ட இயேசு இன்றும் ஜீவிக்கிறார் என்பதை முற்றிலும் விசுவாசிக்காத நாம் பரிதபிக்கப்படக் கூடியவர்கள். நாம் வல்லமையற்ற அறிவுடையவர்கள்.

எபிரெய நிருப ஆக்கியோன் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" எபி.11:6. நமது சபை ஆஜரோ, வேத பயிற்சியோ, ஜெபமோ தேவனைப் பிரியப்படுத்துவதில்லை. இவையெல்லாம் முக்கியமானவைகள்தான், ஆனாலும் விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்த முடியாது. தேவனுடைய சித்தத்திற்கு நம்மை உட்படுத்தும் விசுவாசத்தை அவை உருவாக்க வேண்டும். இயற்கையான மனதிற்கு அது பொருந்தாமலிருக்கலாம்.

யார் உத்தரவாதம் கொடுப்பார்?

"நான் ஒருவனைத் தேடினேன்" என்று ஆண்டவர் சொன்னார். "நான் இரக்கமாயிருக்க விரும்புகிறேன் என்று நம்புகிற ஒருவரைத் தேடினேன். அவர்களைக் கொண்டு ஆச்சரியமான காரியங்களைச் செய்வேன் என்று நம்புகிறவர்களைத் தேடினேன்".

இவ்வேளையின் அதே அழைப்பு மறுபடியும் தொனிக்கிறது. எசேக்கியேலின் நாட்களின் சரித்திரம் போல மறுபடியும் நடைபெறுமா? என்பதுதான் கேள்வி. இரக்கமற்ற ஒரு பருவ காலம் அளிக்கப்படாமல் ஒரு தேசம் நியாயத்தீர்ப்புக்கு உட்படுத்தப் படுமா? அல்லது எங்கிருந்தாவது யாராவது எழும்பி, கிறிஸ்துவின் இந்தப் பொக்கிஷத்திற்கு உத்தரவாதம் கொடுப்பாரா? அவரது ஜீவன், இரக்கம், வல்லமை ஆகியவைதான் பொக்கிஷம்.

இதற்குப் பதிலாக கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லையே என் கிறீர்களா? ஏசாயா மூலம் கூறப்பட்ட அழைப்பைக் கேளுங்கள்: "ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து

பணமுமின்றி விலையுமின்றி திராட்ச ரசமும் பாலும் கொள்ளுங்கள்" ஏசா.55:1.

இதுவே தேவனுடைய கதறல். உங்களிடம் ஒரே ஒரு டாலர் மட்டும் இருக்கிறதா? அதை கொடுங்கள். 50 சென்ட் மட்டும் இருக்கிறதானால் அதையே பணயம் செய்யுங்கள். தேவன் நமது ஆதாரங்களையோ வலிமையையோ பார்க்கிறவரல்ல. ஆனால், "ஆண்டவரே! இதோ அடியேன் என்னை எடுத்துக் கொள்ளும். என்னிடமுள்ள வெறும் 50 சென்டுகளோடோ அல்லது 5 அப்பங்க ளோடோ என்னை எடுத்துப் பயன் படுத்தும். கொடுப்பதற்கு என்னிடம் ஒன்றுமில்லை. ஆனால் நீர் உமது பொக்கிஷத்தைத் திறந்தளிக்கவும், உமது வல்லமை, இரக்கம் ஆகியவற் றைப் பிறருக்காக அறிந்து கொள்ளும் வாய்ப்பு இருந்தால் என்னை பயன் படுத்தும்".

தேவனுடைய பொக்கிஷத்தை இன்னொரு முறை மறைத்து வைக்க முடியாது. தாராளமான இரக்கம் வழங்கப்படும் இந்தப் பருவ காலத்தில் இந்தத் தலைமுறையினருக்கு எதிராக திரை மூட முடியாது. நமது பட்டணத் தைப் பார்த்து கர்த்தர் 'நான் ஒரு மனிதனைத் தேடினேன், ஆனால் ஒரு வனையும் காணவில்லை' என்று சொன் னால் அது எவ்வளவு துக்கமானது! இது நாம் விசுவாசத்துடன் எழுந்து நிற்க வேண்டிய காலம். கிடைக்க முடியாத வற்றிற்காகப் பிரயாசப்படாமல், நாம் செய்யும்படி தேவன் சொன்னவை களைச் செய்ய திறமை அளிக்கும்படி ஜெபிப்போம். நாம் நம்மிடமிருக்கும் சிறியவற்றைக் கொண்டு வரும் போது அவர் அதனை ஏற்றுக் கொண்டு ஒரு தலைமுறையினரையே மாற்றி அமைப்பார்.

கிறிஸ்துவுக்காக எரிந்து பிரகாசித்த ஜார்ஜ் உவைட் ஃபீல்டு பகுதி –2

George White field: A burning zeal for Christ - Part - 2

1736-ல் கிளொசெஸ்டரில் போதகாபிஷேகம் பெற்றபின் ஆக்ஸ் போர்டு திரும்பி வந்து பல்கலைக் கழகத்தில் தமது படிப்பை முடித்தார். அங்கு ஒரு நண்பருக்குப் பதிலாக இரு மாதங்கள் பிரசங்கிக்க அழைக்கப் பட்டார். அது லண்டனிலுள்ள ஒரு தெளிவற்ற பகுதி. அவர் இளைஞனா யிருந்தபடியால் முதலில் பரிகசிக்க ஆரம்பித்தனர். பின்பு திரள் கூட்டமாக மக்கள் கூடினர். ஆக்ஸ் போர்டில் அவரது அறை அடிக்கடி ஜெபிக்கும் மாணவர்களால் நிறைந்திருக்கும். சில மாதங்களுக்குப் பின்பு அவர் பட்டம் பெற்று மிகுந்த உற்சாகத்தோடும் பரிசுத்த ஆவியின் வல்லமையோடும் கலாசாலையிலிருந்து வெளியேறினார்.

அமெரிக்காவில் வாய்ப்பு

இதற்கிடையில் ஜானும், சார்லஸ் வெஸ்லியும் மிஷனெரிகளாக அமெரிக்காவிலுள்ள ஜார்ஜியா சென்ற னர். அவர்கள் உவைட் ஃபீல்டுக்கு அங்கிருக்கும் பல வாய்ப்புகளைக் குறித்து தெரிவித்தனர். அதோடு, 'யாருக்குத் தெரியும் நீங்கள்தான் Mr.உவைட் ஃபீல்டு என்ற மனிதரோ' என உற்சாகப்படுத்தினர். இது தேவனு டைய அழைப்பு என்று எண்ணிய ஜார்ஜ், ஜார்ஜியாவின் செயற்குழுவிற்கு தனது விண்ணப்பத்தை அனுப்பினார். அவர் நன்கு ஏற்றுக் கொள்ளப் பட்டாலும் அமெரிக்கா புறப்பட ஒரு வருடமாயிற்று.

இங்கிலாந்தை விட்டு புறப்படு முன், பிறிஸ்டல் என்னுமிடத்தில் அவர் செய்த பிரசங்கங்கள் பட்டணம் முழு வதையும் கலக்கி விட்டது. 'புதிய பிறப்பு' என்பதனை அவர் பரத்தின் வல்லமையோடு பிரசங்கித்த போது எல்லா நிலையிலுள்ள மக்களும் தொடப் பட்டனர். ஆலயத்தின் மூலை முடுக் கெல்லாம் நிரம்பி விட்டதால் அனேகர் திரும்பச் செல்ல வேண்டியதாயிற்று.

லண்டனில் கப்பலுக்காக காத்தி ருந்த போது அங்கு பல சபைகளில் பிரசங்கிக்கக் கட்டாயப்படுத்தினர். பெரிய சபைகள் கூட வந்த மக்களைக் கொள்ளக் கூடாதபடி கூட்டம் அதிக மாயிருந்தது. அனேகர் திரும்பிச் செல்ல வேண்டியதாயிற்று. ஞாயிற்றுக் கிழமை நேரம் விடிவதற்கு முன்னால் கூட்டத் திற்குச் செல்லும் மக்களால் தெருக்கள் நிரம்பி வழிந்தன. போதகர்கள் பொறாமை கொண்டு கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். சபைகள் அவருக்கு எதிராக அடைக்கப்பட்டன.

1737-ல் கிறிஸ்மஸ் காலத்தில் திரளான மக்கள் கண்ணீரோடு அவரை வழியனுப்பினர். அவர் ஜார்ஜியா வந்த போது சபைகளில் குறைந்த அளவாகவே மக்கள் காணப்பட்டனர். ஆனால் அவர் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டபடியால் அனேகர் ஆலயங் களில் வந்து சேர்ந்தனர்.

திறந்த வெளி பிரசங்கம்

உவைட்ஃபீல்டு 1738-ல் இங்கி லாந்து வந்தார். ஆலயங்களில் இடம் போதாமலிருந்தபடியால் திறந்த வெளியில் பிரசங்கிக்க எண்ணம் கொண்டார். மெதடிஸ்ட் சகோதரர்கள் இதை பைத்தியக்கார ஆலோசனை என்றனர். ஆனால் அவர்களது மாறு பட்ட கருத்தினை அவர் ஏற்கவில்லை.

ஒரு சிறந்த பிரசங்கியாக களைப்பின்றி வாய்ப்பு கிடைத்த இடங்களிலெல்லாம் பிரசங்கித்தார். சபைகள் திறந்தளிக்கப் பட்டால் அங்கு அவர் பிரசங்கிப்பார். அல்லா விட்டால் கிடைத்த சுவர், மேசை எதையும் பீடமாக மாற்றி திறந்த வெளியில் பிரசங்கிப்பார்.

அனேக திருச்சபைகள் அவரைப் புறம்பாக்கிய போது 1739-ல் பிறிஸ் டனிலுள்ள கிங்வுட் என்ற இடத்தில் திறந்தவெளி பிரசங்கத்தை ஆரம்பித் தார். அங்கு சுரங்க ஊழியர்கள் திரளாகக் கூடி வசனத்தைக் கேட்டனர். தினமும் எண்ணிக்கைக் கூடி 20,000 மக்கள் கூடி வந்தனர். அவர்களது கன்னங்களில் கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. நூற்றுக்கணக்கானவர்கள் பாவ உணர் வடைந்து கிறிஸ்துவினண்டை வந்தனர்.

இப்போது அவர் அச்சடிக்கப் பட்ட ஜெபங்களையோ, எழுதி வைக்கப்பட்ட பிரசங்கங்களையோ பயன்படுத்துவதில்லை. அவர் தேவ ஆவியினால் நடத்தப்பட்டபடியால் ஆயத்தப்படுத்தாமலே ஜெபிக்கவும் பிரசங்கிக்கவும் முடிந்தது. அவர் சென்ற இடமெல்லாம் மக்கள் திரளாகப் பின் தொடர்ந்தனர். சபைகள் இடங் கொடுத் தாலும் எந்த சபையும் கொள்ளாத அளவில் மக்கள் கூடினர்.

அவர் மூர் ஃபீல்ட்ஸ் என்ற இடத்தில் திறந்த வெளிக் கூட்டங்களை ஆரம்பித்தார். அந்தப் பட்டணம் அப்போது மிகப் பெரியதும், தீமை நிறைந்ததும், தங்கும் விடுதிகளைக் கொண்டதுமாகும். லண்டன் பட்ட ணத்துப் போக்கிரிகளுக்கு இந்த அழகிய இளைஞனான பாதிரி அங்கியும், மேலாடையும் தரித்து சுவர்களின் மேல் நின்று கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை குறித்து பிரசங்கிப்பது மிகவும் ஆச்சரியத்தை அளித்தது. கென்னிங்டனிலும் அவர் இலட்சக் கணக்கான மக்கள் கூட்டத்தில் பேசினார். மக்கள் பாடிய பாடல்களின் சத்தம் இரண்டு மைல் தூரம் வரை கேட்கப் பட்டது!

C.J. றைல் தமது புத்தகத்தில், "அவர் எப்போதுமே தனது எஜமானின் தொழிலில்தானிருப்பார். ஞாயிறு காலை முதல் சனி இரவு வரையிலும், ஜனவரி 1 முதல் 31 வரையிலும் கிறிஸ் துவை பிரசங்கித்துக் கொண்டே இருப் பார். உலகமெங்கும் சுற்றி மக்கள் மனந் திரும்பி கிறிஸ்துவிடம் வர வேண்டு மென்பதற்காகவே உழைத்தார்" என்று எழுதியிருக்கிறார்.

அமெரிக்காவில் தொடர் ஊழியம்

திரும்பவும் பிரசங்கிக்க அமெரிக்கா பிரயாணம் செய்தார். அவரது பிரசித்தி அட்லான்டிக்கின் இருபுறங்களிலும் பரவியது. சாவன்னா விலிருந்து பாஸ்டன் வரை மக்கள் அவரது செய்திகளைக் கேட்டு பயன டைந்தனர். அவை மெல்லியவைகளா கவும் அக்கினிப் பொறி போலவும், கண்டிப்பானவைகளாகவுமிருந்தன. அவர் அட்லாண்டிக் கடலை 13 முறை கடந்து சென்றிருக்கிறார்.

இரண்டாவது முறை அமெரிக் கக் குடியிருப்புகளுக்கு அவர் சென்ற போது புதிய இங்கிலாந்து பகுதியில் அதிக நேரத்தைச் செலவு செய்தார். கிழக்கு கடற்கரை பகுதி முழுவதும்

அவர் பிரசங்கித்தார். ஐந்து ஆண்டு களுக்கு முன் ஜோனத்தான் எட்வர்ட்ஸ் மூலம் நார்தாம்டன் என்ற இடத்தில் எழுப்புதல் ஏற்பட்டிருந்தது. உவைட் ஃபீல்டு இந்த ஊழியத்தை விரிவுப்படுத் தினார். குடியிருப்புகள் எழுப்புதலால் பற்றியெரிந்தன. 45 நாட்களுக்குள் அவர் 175 பிரசங்கங்கள் பண்ணி விட்டார். அந்த நாட்களின் உற்சாகம் இக்கூடுகைகளால் தொடர்ந்து மிகப் பெரிய விழிப்புணர்வு என அழைக்கப் படுகிறது.

எதிர்ப்பு

தேவ ஊழியத்தை செய்கிறோம் என்று சொன்னவர்களால் அவர் பரிகசிக்கப்பட்டார். அவர் கும்பலான மக்களால் தாக்கப்பட்டார். அவர் மீது முட்டைகளும், கற்களும் வீசப்பட்டன. ஒரு நாள் படுக்கையிலிருக்கும் போது மிருகத்தனமாக தாக்கப்பட்டார். ஆனால் இவை யாவும் அவரை அசைக்க முடியவில்லை. இவை எல்லாவற்றை யும் இயேசுவுக்காக சந்தோஷமாக ஏற்றுக் கொண்டார். ஒரு ஞாயிறு இரவு பைடுபோடு என்ற இடத்திலுள்ள பாதிரியார், உவைட்ஃபீல்டின் பிரசங் கங்களை கேட்கக் கூடாது என்று எச்சரித்தார். ஆனால் மறுநாளில் 10,000 மக்கள் கூடி வந்தனர். உயர் குடி மக்க ளும் சுவிசேஷத்தை ஏற்றனர். ஆயிரக் கணக்கான மக்கள் மழையில் நின்று கொண்டே சுவிசேஷம் கேட்டனர்.

அவர் பேசிய தெளிவான வார்த் தைகள் இயற்கைக்கு அப்பாற் பட்டவை. ஒருநாள் கப்பற் பிரயாணி களுக்குப் பிரசங்கிக்கும் போது ஒரு புயல் காற்றினால் கடலில் ஒரு கப்பல் உடைந்து போனதை விவரித்தார். "கடும்புயல் அடிக்கிறது! நமது பாய் மரங்கள் அழிந்து விட்டன! கப்பல் தன் முடிவு நிலைக்கு வந்து விட்டது! இனி செய்வதென்ன?" அவரது விளக்கம் உண்மை ரூபமாயிருந்ததால் அனை வரும் எழுந்து நின்று கொண்டே "இரட்சா வெள்ளங்களைப் பாருங்கள்! இரட்சா வெள்ளங்களைப் பாருங்கள்" என கத்தினர். அப்போது உவைட் ஃபீல்டு அவர்களைப் பார்த்து, இயேசுக் கிறிஸ்துவே இரட்சா வெள்ளம். அவரைப் பற்றிக் கொள்ளுங்கள். அவர்தான் உங்களை இரட்சிக்க கூடியவர் என்றார்.

அவரது இறுதி பிரசங்கம் திறந்த வெளியில் Exeber, மாசச்சுவட்ஸில் நடந்தது. அது 1770 செப்டம்பர் 29. அவரது 7-வது அமெரிக்கப் பிரயாணம் அது. பிரசங்கிக்கும் முன்னால், ஒருவர் அவரைப் பார்த்து 'ஐயா, நீங்கள் பிரசங் கிக்கச் செல்வதை விட படுக்கைக்குச் செல்வது நல்லது" என்றார். அவரும் சம்மதித்து விட்டு ஜெபித்தார். "ஆண்ட வராகிய இயேசுவே, உமது பணியில் களைப் படைந்து விட்டேன், ஆனால் உமக்காகப் பணி செய்வதில் களைப்ப டையவில்லை. நான் என் ஓட்டத்தை முடிக்கவில்லையென்றால் நான் சென்று பேசட்டும், உமது களத்தில் மறுபடியும் செல்லட்டும். உமது சத்தியத்தை முத்திரை போடும், பின்பு வீடு சென்று மரிக்கட்டும்".

இறுதி பிரசங்கம்

அந்த பிரசங்கம் 2 மணி நேரம் நீடித்தது. அது அவருடைய சிறந்த பேச்சுத் திறமையும் முயற்சியும் நிறைந்த இறுதி வெற்றியாயிருந்தது. அந்த பிற்பகல் நியூ பறிபோர்ட்டுக்கு ஒரு நண்பருடன் வந்தார். அவர் வீட்டில்தான் அவர் தங்கியிருந்தார். அங்கு ஞாயிறு அவர் பிரசங்கிக்க வேண்டும். மக்கள் கூடி வந்தனர். அவரால் பேச முடியவில்லை. ஒரு மெழுகுவர்த்தியை எடுத்துக் கொண்டு மேல் வீட்டறைக்கு படுக்கச் சென்றார்.

ஆத்துமாக்களின் பாரம் அழுத்த ஜீவ வார்த்தைக்காக பசிக்கும் அவர் களுக்காக அவர் படிகளில் நின்று வல்லமையாகப் பேசினார். கண்ணீர் கன்னங்களில் வடிந்தது. மெழுகுவர்த்தி எரிந்து முடியும் வரை பேசினார்.

இரவில் மூச்சுத்திணறல் ஏற்பட் டது. ஞாயிறு காலை 6 மணிக்கு தனது 56-வது பிறந்த நாளுக்கு 3 மாதங்களுக்கு முன்பாக பரலோக வாசலை எட்டி விட்டார்.

அவர் ஒரு கடின உழைப்பாளி. 'நான் துருப்பிடிப்பதை விட தேய்ந்து போவது நலம்' என்பார். நல்ல உடல் நிலையுடனிருந்த போது ஒருவாரத்தில் 15 முறை பிரசங்கித்தார். அடிக்கடி ஒருநாளில் 4 அல்லது 5 முறை பிரசங் கித்ததும் உண்டு. ஆரம்பத்திலிருந்தே அர்ப்பண வாழ்வுடையவர். அவர் முழுமையும் மகிழ்ச்சியுமாக தனது வலிமைகள் யாவற்றையும் கிறிஸ்து வுக்காக அர்ப்பணித்தார். கிறிஸ்து வுக்காக ஆத்துமாக்களை நேசித்தவர். எல்லாவற்றையும் நஷ்டமாக எண்ணி னார். அவரது அன்பு அவரது பிரயாணங் களிலும், உழைப்பிலும், சுய வெறுப் பிலும், நோக்கங்களிலும் அவருக்கு வலிமையளித்தது. அவர் கிறிஸ்து வுக்காக எரிந்து பிரகாசித்தார்.

சபையின் தேவை – மேற்கொள்ளும் ஜெபம்

Prevailing Prayer - The need of the Church

Wesley. L. Duewel

பரலோக வல்லமை வெளிப் பட்டு, தேவ சித்தம் பூமியின் சூழலில் நிறைவேறும்படி ஜெபிக்கும், மேற் கொள்ளும் ஜெபவீரர் எனப்படும் வல்லமையான மன்றாட்டு வீரரையும், சோர்படையாத வெற்றி வீரரையும், ஜெப போராட்டத்தில் விடா முயற்சி யுடையோரையும் தேவன் இன்று அவசரமாகத் தேடுகிறார்.

வியாகுலப்படுகிறவர்களை விட அதிகமான திட்டம் பண்ணுகிற வர்களையும், ஜெபவீரர்களைக் காட்டி லும் அதிகமான பணியாளர்களையும் கொண்டிருப்பதால் தேவ பணி ஊர்ந்து மெதுவாகச் செல்லுகிறது. தேவனு டைய இருதயத்தை அறிந்து கொண்ட ஜெபவீரர்களும், சிலுவையின் வல்லமை, மகிமை ஆகியவற்றை அனுபவித்தவர் களும், நியாயத்தீர்ப்பு, பரலோகம், நரகம் ஆகியவற்றை வேத அடிப்படை யிலான கருத்தையும் முக்கியத்துவத் தையும் அறிந்தவர்களுமான ஜெப வீரர்கள் இன்று தேவை. அடிமைத் தனம், நித்திய நம்பிக்கையின்மை, இரட்சிக்கப்படாதவர்களின் அழிவு, மறுரூபமாக்கும் வல்லமையின் உணர்வு, சந்தோஷம், கிறிஸ்துவின் மகிமை ஆகியவற்றை உணர்ந்து கொள்ளும் ஜெப வீரர்கள் தேவை. தேவனை தேவனாகவும், சாத்தானை சாத்தானா கவும் கொண்டு ஜெபிக்க வேண்டும்.

தேவன் தனது ஜனங்கள் ஜெபத் தில் போராடி மேற்கொள்ள விரும்பு கிறார். இதுவே உலகத்தை நீதிக்கு நேரா கவும், உலக மக்களை இரட்சிப்புக்கு நேராகவும் வழிநடத்தும். கோடிக்கணக் கான மக்கள் பூமியில் பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை தேவன் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர்கள் பாவத்திலிருந்தும் சாத்தானிட மிருந்தும், நரகத்திலிருந்தும் மீட்கப்பட வேண்டும் என்பதனை அவர் வாஞ்சிக் கிறார். இதற்காகவே பாரத்துடன் ஜெபிக்கும் மக்களை அவர் தேடுகிறார். அவர்களது பாவ நிவிர்த்திக்கான நிவாரணம் செலுத்தப்பட்டு விட்டது. கல்வாரியின் பணி வெற்றிகரமாக நித்திய காலத்திற்காக எல்லாம் ஆயத்த மாக இருந்தும் மனிதன் பார்வையற்ற வனாகவும், கண்ணியில் சிக்கினவனா கவும், பாவத்தால் கடினப்பட்டவனா கவுமிருக்கிறான்.

பூமியின் கோடிக்கணக்கான நம்பிக்கையை தேவன் விடாப்பிடியான ஜெபத்தின் மீது வைத்திருக்கிறார். இதற்காக இயேசு இரவும் பகலும் ஜெபிக்கிறார். நமது போராட்ட ஜெபத்தை அவர் எதிர்பார்க்கிறார். ஜெபத்தின் மூலமாகவே தேசங்களை இரட்சிப்பது தேவனுடைய நியமம் சங்.2:8. இது அவருடைய நித்திய பிர மாணம். எனவே இயேசு ஜெபிக்கிறார், நாமும் ஜெபிக்க வேண்டும்.

நாம் தேவனை ஏமாற்றுகிறோம்

ஏராளமான திடனற்ற கவலை யீனமான கிறிஸ்தவர்கள் கிறிஸ்து வையும் அவருடைய அன்பின் இருத யத்தையும், அவரது குருசுண்டு மரித்து உயிர்த்து, பரலோகத்தில் வீற்றிருப்ப வரையும், வியாகுலத்தோடு மன்றாடிக் கொண்டிருக்கும் ஆவியானவரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தேவன் கிருபையாயிருக்கும்படி வாஞ்சிக்கிறார் ஏசா.30:18. ஆனால் நாம்

அவர் நம்மை சிருஷ்டித்து, இரட்சித்து, இம்மட்டும் பாதுகாத்தமைக்குப் பதிலாக செய்ய வேண்டியவற்றை செய்து நிறைவேற்றாதபடியால் அதற்குத் தடையாயிருக்கிறோம்.

சபைகளும், மிஷனெரி ஸ்தாபனங்களும், கிறிஸ்தவ இயக்கங்களும் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டு, அதிகப் பணியாளர்களுடன் முக்கிய பணிகளில் விழிப்புடன் உழைக்கின்றன. ஆனால் பலன் என்ன? அவைகளுக்காக நாம் இன்னும் ஜெபிக்கவில்லை. நமது ஜனங்கள் போராடி ஜெபிக்கக் கற்றுக் கொடுக்கவுமில்லை. நாம் சிறந்த மாதிரிகளாக அவர்களை வழிநடத்தவுமில்லை.

மதிகேடன் மட்டுமே ஜெபிப்பதில்லை. ஆனால் இன்று கிறிஸ்தவர்கள் அவர்களை விட மதிகேடராயிருக்கின்றனர். அவர்கள் எப்போதாவது ஜெபிக்கிறார்கள். அப்படி ஜெபித்தாலும் ஊக்கமாக ஜெபிப்பதில்லை. ஆனால் ஆவிக்குரிய போராட்ட ஜெபத்தை அவர்கள் பண்ணியதே இல்லை. தேவனுடைய பலத்த வல்லமையை அறிந்து கொள்ள ஜெபிக்க வேண்டும். ஆனால் அவர்கள் போராடாமல் ஜெபிக்க முடியாது.

"தற்கால பரிசுத்தவான்களை ஜெபிக்கும்படி கற்பிக்கும் கிறிஸ்தவ தலைவர்கள் எங்கே? தேவ ஜனத்தை ஜெபிக்க வைக்கும் அப்போஸ்தல தலைவர்கள் எங்கே?" (E.M. பௌண்ட்ஸ் எழுதிய 'ஜெபத்தின் மூலம் வல்லமை') ஜெபத்தில் போராடி மேற்கொள்ளுகிறவர்கள் மட்டுமே எப்படிப் போராடி ஜெபிக்க வேண்டுமென்று அறிந்த திரளான ஜெபவீரர்களை எழுப்ப முடியும். மேற்கொள்ளும் ஜெப வீரரான அப்போஸ்தலர்கள் ஜெப வீரர்களை எழுப்ப முடியும். ஜெபமற்ற பீடங்கள் வல்லமையற்ற சபையாரையே உருவாக்க முடியும். யார் இத்தலைமுறையினருக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுக்க முடியும்? ஜெபிக்கும் அரக்கர்கள் எங்கே?

கிறிஸ்துவோடு பரிந்து பேச தேவன் நம்மை நியமித்திருக்கிறார்

தேவன் கிறிஸ்துவை மிகப் பெரிய மன்றாட்டு வீரராக நியமித்திருக்கிறார். சிருஷ்டிப்பிலிருந்தே அவர் நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார். இப்போது பரலோகத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்திருக்கிறார். அங்கிருந்து மகா பிரதான ஆசாரியராக இப்போதும் எப்போதும் மன்றாடுவார். அவரது பிரதான ஆசாரியத்துவத்தின் பலி ஒரேமுறையாக முடிந்து விட்டது. ஆனால் பரிந்து பேசுதல் நித்தியமாகத் தொடருகிறது. இப்படியாக குமாரனாகிய தேவன், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமது மிகப் பெரிய, தொடரும் பரிபூரணமான போராடும் மன்றாட்டு வீரராயிருக்கிறார்.

தேவன் நமது நபரத்துவத்திலும், குணத்திலும் அவரைப் போலிருந்த தமது சாயலாக நம்மைப் படைத்தார். திரித்துவரான யெகோவாவுடன் நாம் ஐக்கியமுடனிருக்க அவர் எதிர்பார்க்கிறார். அனைத்து சிருஷ்டிகளிலும் விசேஷமாக நாம் குமாரனாகிய தேவனிடம் உறவுடனிருக்க வேண்டும். நாம் குமாரனுடன் ஐக்கியமாயிருக்க ஆவிக்குரியபடி சிருஷ்டிக்கப்பட்டவர்கள் (1கொரி.1:9). குமாரனின் மணவாட்டியாக இருக்கிறோம் (ஏசா.62:5, யோவா.3:29, எபே.5:25, 26, வெளி.21:9).

மேலும் தேவனது பதில் வரும் வரைக்கும் நாம் மன்றாடி இவ்வாறு மேற்கொள்ள நாம் சிருஷ்டிக்கப்பட்டு, மீட்கப்பட்டு அழைக்கப்பட்டிருக்கிறோம். இன்று போராடி மன்றாடுதல் கிறிஸ்துவின் மிகப் பெரிய முக்கியத்துவமாயிருப்பதால் அவரது பிரதிநிதிகளாயிருக்கும் நமக்கும் அது உரியதாக வேண்டும். அவர் தமது கண்ணோட்டத்தில் மக்களையும் அவர்களது தேவைகளையும் பார்க்கும் படியாக தூய ஆவியானவரைத் தந்திருக்கிறார். தூய ஆவியானவர் நம்மிலிருந்து நமது பலவீனங்களில் நாம் ஜெபிக்க உதவி செய்கிறார் (ரோமர் 8:26). அவரது நாமத்தின் அதிகாரத்தை ஜெபத்தில் பயன்படுத்த அவர் நம்மை அதிகாரப்படுத்தியிருக்கிறார் (யோ.14:13-14, 15:16, 16:23-24).

அவர் நம்மை தேவனுடைய ஆசாரியர்களாக ஆக்கியிருக்கிறார். அதில் மன்றாட்டுப் பணியும் அடங்கியிருக்கிறது வெளி.1:6. நாம் பரிசுத்த ஆசாரியக் கூட்டம் மட்டுமல்ல 1பே.2:5 அதோடு ராஜரீக ஆசாரியக் கூட்டமாகவுமிருக்கிறோம் வச.9. நமது ராஜாவை நாம் சேவிக்கிறவர்கள். வேறு வேத வசனங்களின் ஒளியில் இந்தப் பொறுப்பு நமது மன்றாட்டில் ஒரு இராஜரீக பகுதியும் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் இயேசுவைப்போல நமது விடாப்பிடியான மன்றாட்டின் மூலம் ஆட்சி செய்யவும், கிறிஸ்துவின் ஆட்சியை விரிவாக்கம் செய்யவும் வேண்டும்.

"தேவன் தாமாகவே நமது ஜெபத்தின் மீது தம்மை சார்புள்ளவராக்குகிறார். ஜெபத்தில் சபை உலகை ஆளுவதற்கான வலிமையைப் பெற்று விட்டது". நமது ஜெபங்களின் வழியாக தேவன் செயல்படவும் பேசவும் செய்கிறார். தேவன் சுயாதீனமான வராகவும், தனது தெய்வீக சுயாதீனத்தை உடைய வராயிருந்தாலும் பெருமளவில் தன்னை நமது மன்றாட்டு ஜெபங்களுக்கு தம்மைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். ஹல்லஸ்பி என்பவர் ஜெபத்தை "பரலோக வல்லமையை பூலோகத்திற்கு கொண்டு வந்த கடத்தி" என்கிறார். மேலும் நாம் ஜெபத்தை விசுவாசிப்பதால் "அது கேள்வி கேட்கப்படாமலே மிகத் துரிதமான விதத்தில் தேவன் செயல்படும் விதம்" என்றும் குறிப்பிடுகிறார். அது இவ்வுலகில் கிறிஸ்துவின் மூலம் அவரது இரட்சிப்பின் வல்லமையை உலகுக்கு அளிக்க முடியும். கால்வின் என்பவரும் ஜெபம் சாத்தானின் வல்லமை தோற்கடிக்கப்படவும் தேவனது அரசு விரிவடையவும் ஏதுவாயிருக்கிறது என போதித்தார்.

மேற்கொள்ளும் ஜெபத்தின் மகிமை

இன்று தனது தெய்வீக சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்துவின் மிக உயர்ந்த மகிமை, மேற்கொள்ளும் ஜெபத்தின் மகிமையே என்று ஆன்ட்ரூ முர்ரே எழுதுகிறார். அது நமது மிகவும் மகிமையான ஊழியமாகிவிடுகிறது. கிறிஸ்துவோடு இணை மன்றாட்டு வீரராக இருப்பது அவரைப் போன்ற செயல்பாட்டை நம்மில் ஏற்படுத்துகிறது. அவரது இருதயத்தின் முதன்மைகளை நாம் கடைபிடிப்போம். வேறு எந்த வழியிலும் ஒரு கிறிஸ்தவன் சபைக்கு மிகுந்த பெலனாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்க முடியாது. கிறிஸ்துவின் அரசை விரிவாக்கம் செய்து இயேசுவின் பெயருக்கு மகிமையைக் கொண்டு வர வேறு வழி கிடையாது. மேற்கொள்ளும் மன்றாட்டு நமக்கு உலகில் அளிக்கப்பட்ட மிக உயரிய சேவை.

மேற்கொள்ளும் ஜெபம் ஏன் மகிமையானது? அது நம்மைக் கிறிஸ்துவின் இருதயத்தோடு இணைக்கிறது. இந்த ஜெபத்தின் மூலம் கிறிஸ்துவின் பார்வை, நோக்கம் மற்றும் தூய தீர்மானங்கள், விலையேறப்பெற்ற ஆத்தும வியாகுலம், கிறிஸ்துவின் பாரம் நாம் பங்கிட்டுக் கொள்கிறோம். இது அனைத்து உழைப்புகளிலும் கிறிஸ்துவைப் போன்றதும் ஆவியால் கட்டுப்படுத்தப்பட்டதுமாயிருக்கிறது. ஆவியானவர் கிறிஸ்துவின் பாரத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதால் குமாரனைப் போன்ற இதயக் கதறுதலும் ஆவியானவரைப் போன்ற பெருமூச்சும் உங்களில் காணப்படுகிறது ரோமர் 8:26.

கிறிஸ்துவோடு கண்ணீர் விடுவதும், அவரோடு அன்பு கூருவதும், அவரோடு அவரது வாஞ்சைகளால் பற்றி எரிவதும் மேன்மையானவைகள். கிறிஸ்துவோடு மன்றாடி வெற்றி பெறுவது மகிமையானது. எபி.6:5-ல் சொல்லப்பட்டபடி வரப்போகிற காலத்தின் வல்லமையையும், சந்தோஷத்தையும் நமது மேற்கொள்ளும் ஜெபம் வழியாகப் பெறலாம். ஆவியானவரின் நம்பிக்கையால் நமது ஜெபம் கேட்கப்பட்டது என்றும் பதிலளிக்கப்பட்டது என்றும் நாம் உணரும் போது மகிமை ஆரம்பமாகிறது. கண்ணுக்குப் புலனாகும் பலன்களை எப்போதும் உடனடியாக எதிர்பார்க்க முடியாது. ஆனால் நாம் தேவசித்தப்படி போராடி ஜெபித்து மேற்கொண்டோம் என்பதும் ஆவியானவர் மூலம் தேவனுடைய பதில் நிச்சயமானது என்றும் அறிந்து கொள்ள முடியும்.

அனைத்து மேற்கொள்ளும் ஜெபங்களும் நாம் மறுமையை அடையும்போது, அவற்றின் பரிசுகளோடு திறந்தளிக்கப்பட்டு இறுதி மேன்மையான மகிமையைப் பெற்றுக் கொள்ளும். தேவனுடைய மேற்கொள்ளும் ஜெப வீரரின் ஜெபங்களுக்குமுரிய கனமும் பரிசுகளும் நியாயத்தீர்ப்பின் ஆசனத்திற்கு முன்பாக அறிவிக்கப்பட்டு, அளிக்

(8-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

போதகராயிருந்த போது, ஆண்டவர் அவரிடம் 'நீ உட்கார்ந்திருப்பது ஒரு மிஷனெரியின் ஆசனம்' என்றார்.

உதாரணமாக நாகர்கோவிலில் பிரபலமான கஸ்பா சபை ஆலயம் **'கல்கோயில்'** என்று அழைக்கப்படுகிறது. அதன் முதல் போதகர் Rev.சார்ல்ஸ் மீட் என்ற வெளிநாட்டு மிஷனெரி ஆவார். எங்கள் தெருவின் பின்பக்கமுள்ள தெரு அவரின் பெயரால் **'மீட்தெரு'** என்றழைக் கப்படுகிறது. நமது தெருவும் மேல் நாட்டு மிஷனெரியான **'நியூபோர்ட்'** (NEWPORT) என்பவர் பெயரால் அழைக் கப்படுகிறது. இதனை அறியாத அநேகர் நியூ போர்ட் (NEW PORT) என்று தவ றாக எழுதி, அச்சிடவும் செய்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் Rev.C.சாமு வேல் ஐயர், தான் போதகராக நியமிக் கப்பட்ட அனைத்துச் சபைகளிலும், பக்கத்தில் உள்ள கிராமங்களில் ஞாயிறு பள்ளி ஆரம்பிப்பார்கள். காலகிரமத்தில் அது திருச்சபையாக மாறி, அதன் மூலம் 17 ஆலயங்கள் புதிதாக கட்டி அத்தி யட்சாதீனத்திற்கு அளித்துள்ளார்கள். அவர்கள் ஓய்வு பெற்ற பின்னரும் அவர்கள் ஆரம்பித்த சில ஞாயிறு பள்ளிகள் சபையாக மாறியுள்ளது.

அவர்கள் மார்த்தாண்டம் என்ற இடத்தில் போதகராயிருந்த பொழுது, கன்னியாகுமரி மாவட்டத்தில் சுமார் 50 சதமானம் கிறிஸ்தவர்கள் இருக்கி றார்கள், ஆனால் குஜராத் மாநிலத்தில் 0.5 சதமானம் கிறிஸ்தவர்களே இருக் கிறார்கள் என்ற பாரத்தை ஆண்டவர் அவர்களுக்கு அளித்த போது, அதற்கு கீழ்படிந்து 1981-ம் ஆண்டு கன்னியா குமரி மாவட்ட வட இந்திய மிஷனெரி சங்கம் (North India Missionary Society) என்ற மிஷனெரி இயக்கத்தை நிறுவி, குஜராத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித் தார்கள். அவர்கள் போதகராக இருந்த பொழுது வருடத்திற்கு ஒரு முறை அவர்களுக்கு கிடைக்கும் ஒரு மாத விடுப்பில் குஜராத் போய் ஊழியம் செய்வார்கள்.

ஓய்வு பெற்ற பின் 3 மாதம் கன்னியா குமரி மாவட்டத்தில் முன்னேற்றப் பணியும் 3 மாதம் குஜராத்திலும் ஊழியம் செய்தார்கள். அவர்கள் அநேக சபைகளை ஸ்தாபித்தாலும் தற்சயம் 12 சபைகள் இந்த ஸ்தாபனத்தின் கீழ் இருக்கிறது. 06-06-2015 அன்று தன் 87-வது வயதில் அவர்கள் தனது ஓட்டத்தை முடித்தார்கள்.

13-10-2015 அன்று எனது தகப்பனார் **S.தேவதாசன்** அவர்கள் பெயரால் ஒரு ஆலயம் கட்டி பிரதிஷ்டைச் செய்தார் கள். தற்சமயம் கட்டப்பட்ட ஆலயத்தை திறந்து வைக்க எனது சகோதரி திருமதி **கிறிஸ்டி சாமுவேல்** M.A.,B.T., ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை (வயது 79) அவர்கள் என்னை அதிக அன்போடு அழைத்தார்கள். அழைப்பை அன்புடன் ஏற்று, ஏப்ரல் மாதம் 21-ம் தியதி மாலை நாகர்கோவிலிலிருந்து புறப்பட்டு, சென்னை, பாம்பே வழியாக சனிக் கிழமை இரவு 10.00 மணியளவில் குஜராத்திலுள்ள சூரத் ரெயில் நிலையம் போய் சேர்ந்து, அங்கிருந்து ஊழிய வாகனத்தில் 70 கி.மீ பிரயாணம் பண்ணி நடு இரவு சுமார் 1.00 மணியள வில் 'கப்பூரா' என்ற ஊழியத் தலைமை யிடம் போய் சேர்ந்தோம்.

மறுநாள் 23-04-2017 ஞாயிறு காலையில் 'கப்பூரா'விலிருந்து 20 கி.மீ தூரத்திலுள்ள 'பல்பூர்' சபை ஆலயத் தைப் பார்த்து ஜெபித்தோம்.

அங்கிருந்து 20 கி.மீ தூரத்திலுள்ள **'பதாம் துங்கிரி' என்ற இடத்தில் புதிதாக கட்டியிருந்த ஆலயத்தை ஜெபத்தோடு திறந்து வைக்கவும், சிறப்புச் செய்தி அளிக்கவும் அன்பின் ஆண்டவர் அடிமைக்கு இரக்கம் பாராட்டினார்.**

பகல் விருந்துக்குப் பின் 'பதாம் துங்கிரி'யிலிருந்து 10 கி.மீ தூரத்திலுள்ள 'தராம்புரி' ஆலயத்தை பார்வையிட் டோம். அங்கிருந்து 50 கி.மீ பிரயாணம் பண்ணி **'கப்பூரா'** வந்து சேர்ந்து இளைப் பாறினோம்.

மறுநாள் 'கப்பூரா'விலிருந்து 7 கி.மீ தூரத்திலுள்ள அம்பாச் சபை, அங்கி ருந்து 3 கி.மீ தூரத்திலுள்ள 'தாக்கிளி' யில் Rev.S.தேவதாசன் அவர்கள் பெயரால் கட்டப்பட்ட ஆலயம், ஆகியவற்றை பார்வையிட்டு 4 கி.மீ தூரத்திலுள்ள 'வாலோட்' ஆலயம், அங்கிருந்து மறுபடியும் **'கப்பூரா'** வந்து சேர்ந்தோம்.

மதியம் 'கப்பூரா'விலிருந்து ஊருக்கு புறப்பட்டு, வரும் வழியில் 25 கி.மீ தூரத்திலுள்ள 'பாஜிபுரா' ஆலயத்தை யும் பார்வையிட்டு 70 கி.மீ பிரயாணம் பண்ணி சூரத் ரெயில் நிலையம் வந்து சேர்ந்தோம்.

Rev.C.சாமுவேல் அவர்கள் ஆரம்பத் தில் சைக்கிள் மூலமாகவும், பிற்பாடு இரண்டு சக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்தும் இவ்வளவு தூரத்தில் இத்தனை திருச்சபைகளையும் ஸ்தாபித் திருப்பது எனக்கு மிகவும் வியப்பா யிருந்தது.

இந்த ஆலயங்களில் சிலவற்றின் முன்பாகவும், சிலவற்றில் உள்ளே சென்றும் ஜெபித்தோம். Rev.S.தேவ தாசன் நினைவு ஆலயத்தின் உள்ளே விரிக்கப்பட்டிருந்த சால்வையில் முழங்காற்படியிட்டு, வானத்திற்கு நேராக எங்கள் கரங்களை உயர்த்தி ஜெபித்தோம். ஒரே ஒரு கேள்வியோடு இந்த மிஷனெரி பிரயாண விபரங்களை முடிக்க விரும்புகிறேன்.

உனக்காக நான் மரித்தேன்;
எனக்காக நீ என்ன செய்தாய்?

இந்த பத்திரிகை உங்கள் கரங்களில் கிடைக்கும் போது, நாங்கள் தேவ தயவால் T.R.பட்டினம் உபவாச ஜெபத்தை முடித்திருப்போம்.

கர்த்தருக்குச் சித்தமானால் நமது அடுத்த உபவாச ஜெபம் நாகர்கோவில் பட்டணத்தில், **வருகையின் தூதன் அலு வலகம்** அருகில் நடைபெறும். (விளம் பரம் பார்க்க) வேறு சிலர் நடத்துகிற கூட்டங்களுக்கு முன்பதிவு செய்கிற 1000 பேர்களுக்கு மட்டுமே அனுமதி என்று விளம்பரப்படுத்துகிறார்கள். ஜனங் களும் ரூ.200/- பதிவு கட்டணம் செலுத்தி பதிவு செய்கிறார்கள்!

நம்முடைய உபவாச ஜெபம் சபை பாகுபாடற்றது; **அனுமதி இலவசம்!** ஆனால் **முன்பதிவு அவசியம்.** எனவே உங்க ளுக்கு ஒரு பதிவுதாள் அனுப்பப் பட்டால் தயவு செய்து தொலைபேசி வழியாக முன்பதிவு செய்யுங்கள் என்று மிகவும் அன்பாய் கேட்கிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அலுவலக போன் : 04652 403295
அலுவலக மொபைல் : 95432 21008
: 94897 40295

10.00 - 1.00; 2.00 - 6.00

நான் தேசத்தை அழிக்காதபடிக்கு . . .ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன் எசேக்.22:30

ஜெபியுங்கள்! **பங்கு பெறுங்கள்!**

Heart Cry for Holy Spirit Revival

எழுப்புதலுக்காக இதய கதறல் – 2017

(உயிர்மீட்சிக்காக 7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **ஆண்கள் ஐக்கிய சங்க ஹால்**
ஹோம் சர்ச் அருகில், **நாகர்கோவில்**

காலம் : ஜூன் மாதம் 2-வது சனிக்கிழமை (10-06-2017)

சமயம் : காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

செய்தி : சகோ. **வெஸ்லி தேவதாசன்,**
(ஆசிரியர், வருகையின் தூதன், நாகர்கோவில்)

ஜெபம் : 1. NIMS **மிஷனெரிகள்,** குஜராத்
2. IEM **மிஷனெரிகள்,** தமிழ்நாடு
3. TLM **மிஷனெரிகள்,** உத்திரபிரதேசம்

முன் பதிவு அவசியம்

சபை பாகுபாடற்றது! **அனுமதி இலவசம்!**

முன் பதிவு செய்ய வேண்டிய தொலைபேசி எண்கள்:

வருகையின் தூதன் 95432 21008, 94897 40295,
பாஸ்டர் K. செல்வம் : 94864 13519, சகோ. K. ஜான் பிரிட்டோ : 94429 41891,
Rev. D. ஜெயசேகரன் : 99658 02420, சகோ .S. கிப்சன் சாமுவேல் : 94438 45402

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படும்போது எவ்வளவு பெரிய கனம் உண்டாகும்! (1கொரி.3:11-15, 4:5, 9:25).

அவ்வேளையில் நாம் நமது போராட்ட ஜெபம் பிற ஜெப வீரரின் ஜெபங்களோடும், தேவகுமாரனாகிய கிறிஸ்துவின் ஜெபத்தோடும் இணைந்து சென்றிருப்பதைக் கண்டு ஆச்சர்ய மடைவோம். அப்போது மறைந்து இருக்கும் ஜெப வீரர்கள் அனைவரும் தேவனுடைய பலத்த கிரியைகளென் பதை அறியக்கூடும். மேலும் அனைத்து மன்றாட்டுகளும் தேவனுடைய இருத யத்தில் ஆரம்பித்து நம்மோடு பகிர்ந்து கொள்ளப்பட்டு தூய ஆவியானவரால் ஆமென் கூறப்பட்டு, குமாரன் மூலம் பிதாவிடம் தூதர்களின் உதவியால் ஒப்படைக்கப் படுகிறது என்பதை நாம் காண முடியும். எனவே எந்த மன்றாட்டு ஜெபமும் வீணாவதில்லை. கிறிஸ்துவின் சிங்காசன ஊழியத்தில் தகுதியற்ற நாம் பங்குதாரராக இருக்கிறோம் என்பதை எண்ணி ஆச்சரியம், அன்பு ஆகிய வற்றால் நிரம்பி அவருக்கு முன்பாகப் பணிந்து வணங்குவோம்.

ஆண்டவரே! மேற்கொள்ளும் ஜெபத்தின் பொறுப்பு, மகிமை, வாய்ப்பு ஆகியவற்றை எங்களுக்குப் போதியும்.

உத்திரபிரதேச ஊழிய அறிக்கை

நர்ஸடா என்கிற கிராமத்தில் நம்மை அதிகமாக எதிர்த்து கொண்டிருந்த ஒரு நபர் சஞ்சய் என்கிறவர். கடந்த மாதத்தில் அவருடைய கிராமத்தில் நமது ஊழியர் சென்றிருந்த போது மிகவும் கோபமாக பேசிவிட்டு தனது மனைவியுடன் ஒரு இந்து கோவிலுக்கு சென்றார். சென்ற இடத்தில் மாடியில் ஏறி பூஜை செய்து இறங்கிய போது மனைவி தவறி விழுந்து கால் உடைந்தது. அந்த கூழ் நிலையில் தேவன் அவரை சந்தித்தார். இப்போது அவர் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு சபைக்கு வர தொடங்கியிருக்கிறார்.

மாரிக்பூர் என்கிற கிராமத்தில் சாந்தி என்கிற சகோதரி, இவர் சபைக்கு வந்ததனால் இவரது கணவர் இவரை மிக அதிகமாக (எல்லோரும் பயப்படுகிற அள வுக்கு) அடித்து பயமுறுத்தினார். ஆனாலும், இந்த சகோதரி இப்போதும் தேவனை நேசிக்கிறவராகவும், ஆண்டவருக்கு சாட்சியாக வாழ்கிறவராகவும் காணப் படுகிறார்.

மானாப்பூர் கிராமத்தில் கல்லு என்கிற பெரியவர் Stroke வந்ததன் மூலம் நடக்க முடியாத நிலையில் காணப்பட்டவர் இப்போது தேவனுடைய அற்புத சுகத்தினால் அவர் நன்றாக நடந்து தன்னு--டைய காரியங்களை கவனிக்கிறார். இதன் மூலம் 7 பேர் அந்த கிராமத்திலிருந்து புதிதாய் சபைக்கு வருகிறார்கள்.

பத்திரிகை செய்திகள்

இந்திய அஞ்சல் துறை

அஞ்சல் துறையின் பல்வேறு சேவைகள்

(தொடர்ச்சி)

ஆயுள் காப்பீடு மற்றும் விபத்து காப்பீட்டு திட்டம்

மக்களின் பாதுகாப்பு கருதி ஆயுள் மற்றும் விபத்து காப்பீட்டு திட்டமான பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா, பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா ஆகிய திட்டங்களை அஞ்சல் துறை செயல்படுத்தி வருகிறது. சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்தில் ஆண்டு பிரீமியம் வெறும் 12 ரூபாயில் 2 லட்சம் ரூபாய்க்கான விபத்து காப்பீடு 18 வயது முதல் 70 வயதுள்ள அனைத்து அஞ்சலக சேமிப்பு கணக்குதாரர்களும் இத்திட்டத்தில் சேரலாம். விபத்தினால் ஏற்படும் இறப்பு மற்றும் உடல் ஊனத்திற்கும் காப்பீடு வழங்கப்படும். காப்பீட்டு காலம் ஒரு ஆண்டாகும். (ஜுன் 1-ந் தேதியில் மே 31-ந் தேதி வரை). பிரீமியத் தொகை கணக்குதாரரின் சேமிப்பு கணக்கில் இருந்து ஆட்டோ டெபிட் வசதி மூலம் கழித்துக் கொள்ளப்படும். எந்த ஒரு நபரும் ஒரு சேமிப்பு கணக்கு மூலம் இத்திட்டத்திற்கு தகுதி பெற்றவர்கள் ஆவர்.

ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தில், ஆண்டு பிரீமியம் வெறும் 330 ரூபாயில் இருந்து 2 லட்சம் ரூபாய்க்கான ஆயுள் காப்பீடு. 18 வயது முதல் 50 வயதுள்ள அனைத்து அஞ்சலக சேமிப்பு கணக்குதாரர்கள் இத்திட்டத்தில் சேரலாம். பாலிசிதாரர் இறந்து விட்டாலும் அவரது குடும்பத் துக்கு ஆயுள் காப்பீடு உண்டு.

அருகில் உள்ள தபால் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு அதற்கான படிவத்தை நிரப்பிக் கொடுத்து இந்த திட்டத்தின் நன்மைகளை பெறலாம்.

வருகிற கல்வி ஆண்டு முதல்

மாணவர் பாதுகாப்பிற்கு புதிய தொழில் நுட்பம் அறிமுகம்

பிரீஸன் டெக்னாலஜீஸ் நிறுவனம் அறிவிப்பு

நாகர்கோவில், மே.12-

இந்தியாவில் ஆண்டிற்கு 67,000 குழந்தை கள் காணாமல் போவதாக தேசிய குற்ற ஆவணப் பணியகம் தெரிவித்துள்ளது. மேலும் இளம் குற்ற வாளிகளில் 66 சதவீதம் பேர் 16 முதல் 18 வயது வரையிலான இளைஞர்கள் என்றும் குற்ற ஆவணப் பணியகம் கூறி உள்ளது. மாணவர்கள் குற்ற செயல்களில் ஈடுபட்டு தங்கள் எதிர் காலத்தையே கேள்விக்குறியாக்கும் இத்தகைய நிலைக்கு பெற்றோர்களும் ஒரு காரணம் என்றால் அது மிகையல்ல. பணி சுமை நிமித்தமாக தங்கள் பிள்ளைகளுடன் நேரம் செலவழிக்க தவறுவதுடன் தங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளியின் நிகழ்வு களை தெரிந்து கொள்ள தவறி விடுகின்றனர்.

பெற்றோர்களுக்கும் பள்ளிகளுக்கும் இடையே இருக்கும் தகவல் பரிமாற்ற இடை வெளியே குறைப்பதுடன் மாணவர்கள் பள்ளிக்கு சென்றார்கள் என்பதை உறுதி செய்து அவர்களை கண்காணிக்க நாகர்கோவிலை சேர்ந்த ப்ரீஸன் டெக்னாலஜீஸ் என்ற சாப்ட்வேர் நிறுவனம் கடந்த நான்கு ஆண்டுகளாக 'மை ஸ்கூல் மை லாகின்' என்ற திட்டத்தை இந்தியாவில் பல பள்ளிகளிலும் வெற்றிகரமாக பயன்படுத்தி வருகிறது.

'மை ஸ்கூல் மை லாகின்' மொபைல் ஆப் மூலம் பெற்றோர்கள் பள்ளி நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடியும். மேலும் பள்ளி நிர்வாகத்தை தொடர்பு கொள்ளுதல், தேர்வு மதிப்பெண்களை அறிந்து கொள்ளுதல், மாணவர்களின் விடுப்பு, வீட்டு பாடம் போன்ற பல தகவல்களை மொபைல் ஆப் மூலம் தெரிந்து கொள்ளலாம். மாணவர்களின் விடுப்பு உடனடி யாக பெற்றோர்களுக்கு எஸ்.எம்.எஸ் மூலமும் தெரிவிக்கப்படுவதால் பெற்றோர்களுக்கு தெரியா மல் மாணவர்கள் விடுப்பு எடுக்க முடியாது.

'மை ஸ்கூல் மை லாகின்' இணையதள சேவை மூலம் செயல் திறன் வரைபடம், கல்வி, பண்பு, ஈ-மதிப்பெண் அட்டை, தேர்வு அட்டவணை என எண்ணற்ற தகவல்களை தெரிந்து கொள்ள லாம். இதன் மூலம் வெளிநாடுகளில் வசிக்கும் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் குறித்த தகவல்களை தெரிந்து கொள்ள முடிகிறது. பள்ளி யின் முதல்வர் அல்லது குறிப்பிட்ட ஆசிரியருக்கு பெற்றோர்கள் தகவல் அனுப்பி பதில் பெற முடியும்.

ப்ரீஸன் டெக்னாலஜீஸ் நிறுவனத்தின் இத்திட் டத்தால் பள்ளி நிர்வாகத்தின் பணி சுமை வெகு வாக குறைவதுடன் ஒவ்வொரு ஆசிரியர்களின் செயல்பாடுகளும் பதிவேற்றப்பட்டு சாப்ட்வேர் மூலம் அவர்களின் தரம் நிர்ணயிக்கப்படுகிறது. மேலும் குறிப்பிட்ட ஒரு வகுப்பில் மாணவர்களின் விடுப்பு ரிப்போர்ட் தேர்வில் வெற்றி பெற்ற அல்லது தோல்வியடைந்த மாணவர் விபரம் அடங்கிய ரிப்போர்ட் என பள்ளி நிர்வாகத்திற்கு மிகவும் தேவையான அனைத்து விதமான ரிப்போர்ட்டு களையும் ஓரிரு நொடிகளில் பதிவிறக்கம் செய்யவோ அல்லது பிரிண்ட் செய்யவோ முடியும்.

மாலைமலர்

Registered with the Registrar of News Paper For India under R.N.I. 11967/'67
Postal Reg. No. KKI/63/2015-2017
Date of Publication : 27th of Every month
Date of Posting : 27th & 28th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To